# 58

# எருசேலமின் அழிவு

## (24:15-35)

*24:15-35ல் சீஷர்களின் கேள்விகளுக்கு இயேசு தொடர்ந்து பதிலளிக்கிறார். எருசலேமை இராணுவம் சூழ்ந்து கொள்வதை அவர்கள் காணும்போது பட்டணத்திலிருந்து ஓடிப்போய்விடும்படி அவர் எச்சரித்தார் (24:15-22). அடுத்ததாக அவர் விடுதலை தருவதாகக் கூறும் "கள்ளக் கிறிஸ்துக்களின்" வார்த்தைகளை நம்ப வேண்டாம் என்று சொன்னார் (24:23-28). பிறகு அவர் மனுஷகுமாரன் தோன்றும் அடையாளத்தையும் சொன்னார் (24:29-31) மேலும் எருசலேமின் அழிவு நேரத்தையும் குறித்துப் பேசினார் (24:32-35).*

## "பாழாக்குகிற அருவருப்பைக் காணும்போது நீங்கள் ஓடிப்போகக் கடவீர்கள்" *(24:15-22)*

**15 மேலும் பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே. வாசிக்கிறவன் சிந்திக்கக் கடவன். நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது,**

**16 யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்.**

**17 வீட்டின்மேல் இருக்கிறவன் தன் வீட்டிலே எதையாகிலும் எடுப்பதற்கு இறங்காதிருக்கக்கடவன்.**

**18 வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரங்களை எடுப்பதற்குத் திரும்பாதிருக்கக் கடவன்.**

**19 அந்நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் பால் கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ.**

**20 நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது ஓய்வுநாளிலாவது, சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள்.**

**21 ஏனெனில். உலக முண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்.**

**22 அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை, தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்.**

**வசனம் 15.** பாழாக்கும் அருவருப்பு உலகத்தின் முடிவில் வரும் என்று அநேகர் போதிக்கிறார்கள். ஆகிலும், இந்த நிகழ்ச்சி எப்பொழுது சம்பவிக்குமென்று நாம் ஆச்சரிய வினா எழுப்ப

வேண்டுவதில்லை. ஏனெனில் எருசலேம் தேவாலயமும் அழிவுறும் போது இவை சம்பவிக்குமென்று இயேசு குறிப்பிட்டார். லூக்கா சுவிசேஷத்தில் எழுதியுள்ளபடி, இது தெளிவாக்கப்படுகிறது, *"எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை* நீங்கள் காணும்போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள்" (லூக்கா 21:20; வலியுறுத்தல் சேர்க்கப்படுகிறது). ஆகையால், பின்வரும் எச்சரிக்கைகளெல்லாம் ரோம சேனைகளால் சூழப்பட்ட எருசலேமைக் கண்டவர்களும் அங்கு அப்பொழுது வாழ்ந்து கொண்டிருந்தவர்களுமாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டவைகள்.

"பாழாக்குகிற அருவருப்பைக் குறித்து" **தானியேல் தீர்க்கதரிசி** முன்னுரைத்தார் (தானியேல் 9:27; 11:31; 12:11). அவருடைய வார்த்தைகள் 4ம் அந்திகஸ் எபிபானேஸ் என்பவரின் அக்கிரமச் செய்கைகளில் நிறைவேறத் துவங்கியது, அவன் கி.மு. 168ல், செலுக்கியர்களை ஆண்டு கொண்டிருந்தான், அப்பொழுது அவன் யூதர்களின் தேவாலயத்திலிருந்த தகன பலிபீடத்தின் மேல் ஜீயஸ் எனும் விக்கிரக தெய்வத்துக்கு ஒரு பலி பீடத்தைக் கட்டி அதின்மேல் பன்றியை பலியிட்டான்.[1] கி.பி. 70ல் எருசலேம் வீழ்ந்த நிகழ்ச்சி தானியேலின் வார்த்தைகளின் பாழாக்குகிற அருவருப்பு முழுமையாய் நிறைவேறியிருந்ததை அடையாளப்படுத்தியது.

இயேசு பாழாக்குகிற அருவருப்பு **பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கும்,** என்று தேவாலயத்தை குறிப்பிட்டுப் பேசினார் (நடபடிகள் 6:13; 21:28). எருசலேமின் அழிவின் போதும் அதற்கு முன்பு நடந்த நிகழ்ச்சிகளும் ஆகிய அநேக சம்பவங்கள் "பாழாக்குகிற அருவருப்பு" என்று தொகுத்து சொல்லப்படுகிறது. (சமய வெறி கொண்டிருந்த) செலோத்தே என்னப்பட்ட யூதர்கள் தேவாலயத்தின் உள்பிரகாரத்தை ஆக்கிரமித்துக் கொண்டு அதன் புனிதத் தன்மையைக் கெடுத்து ஜனங்களை கொலை செய்தார்கள் என்பதும் மேற்குறித்த (பாழாக்குகிற அவருவருப்பைக்) சம்பவத்தைக் குறிப்பதாக இருக்கலாம்.[2] ஜோசிபஸ் எழுதியுள்ளபடி, அன்னானஸ் எனும் பிரதான ஆசாரியன் அவர்கள் நடுவே நின்று, "நிச்சயமாக, தேவனுடைய வீடு ஏராளமான அருவருப்புகளால் நிறைக்கப்படுவதற்கு முன், நான் மரித்து விடுவேனனால் நலமாயிருக்கும், அல்லது குறிக்கோள் இல்லாமல் இரத்தம் சிந்தும் வில்லன்களின் பாதங்கள் இந்த பரிசுத்த ஸ்தலங்களை மிதிக்கலாகாது"[3] என்று சொன்னார். தேவாலயத்தை தீ வைத்து கொளுத்தி அழித்தபோது, தீத்துராயன் தேவாலயத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் நுழைந்தான்.[4] அவனுடைய சேனை வீரர்கள் அதின் பரிசுத்தப் பொருட்களை கொள்ளையிட்டு ரோமாபுரிக்கு கொண்டு சென்றனர்; இந்த நிகழ்வுகள் எல்லாம் தீத்து ராயன் வளைவில் நினைவு விழாவாகக் கொண்டாடப்பட்டது. வெற்றியைக் கொண்டாடும் பொருட்டு யூதர்களின் தேவாலய வெளிப்பிரகாரத்தில் தங்களுடைய முறைப்படியான பலிகளையிட்டு கொண்டாடி ரோமர்கள் பரிசுத்த குலைச்சலாக்கினார்கள்.[5] ரோமர்கள் இப்படி தேவாலயத்தை பரிசுத்த குலைச்சலாக்கியபோது, கிறிஸ்தவர்கள் ஓடிப்போவதற்கு மிகவும் தாமதமான நேரமாயிருந்தது (24:16).

ஆர்வமிக்கக் காரியம் என்னவெனில், மத்தேயு **வாசிக்கிறவன் சிந்திக்கக் கடவன்** எனும் அடைமொழியை மாற்கு எழுதினதைப் போலவே, எழுதியிருக்கிறார் (மாற்கு 13:14). இதுபோன்ற ஒத்த வாசகங்களிலிருந்து

சுவிசேஷ எழுத்தாளர்களுக்குள் இருந்த இலக்கிய சார்புத்தன்மை மூலம் ஆலோசனையாக - பரிசுத்த ஆவியினால் வழி நடத்தப்பட்டு - எழுதப்பட்டது என்பதற்கு ஒரு ஆதாரம். "வாசிக்கிறவன் சிந்திக்கக் கடவன்" எனும் வாக்கியம் மனதளவில் அறிந்துணர்ந்திருக்கிற விசுவாசிகள் எச்சரிக்கையடையவும் சரியான நடவடிக்கை எடுக்கவும் அறைகூவலாக உள்ளது (காண்க தானியேல் 12:10; வெளிப்படுத்தின விசேஷம் 13:18).

**வசனம் 16.** இந்த வசனம் **யூதேயாவில் இருப்பவர்கள்** என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத் தெளிவாக்குகிறது. ரோமர்களின் சேனைகள் வருவதைக் காணும்போது (லூக்கா 21:20), தங்களுடைய ஜீவனைக் காப்பாற்றிக் கொள்ள ஏதுவாக அவர்களை **மலைகளுக்கு ஓடிப்போகும்படி** கூறப்பட்டனர். மலைப்பிரதேசங்களில் தங்களுடைய சத்துருக்களை தோல்வியுறச் செய்வது இயலாத காரியம் என்று உணர்ந்த இஸ்ரவேலர்கள் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் குகைகளிலும், மலைகளில் உள்ள கெபிகளிலும் தங்களை மறைத்துக் கொண்டார்கள் (நியாயாதிபதிகள் 6:2; 1 சாமுவேல் 13:6; 1 இராஜாக்கள் 18:4; காண்க ஏசாயா 2:19, 21; எரேமியா 49:30; எசேக்கியேல் 7:15, 16; 33:27). இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில், மெக்காபியரின் புரட்சி காலத்தில் கூட அவர்களின் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு மலைகள் பாதுகாப்பான இடங்களாயிற்று.[6] இந்த வேளையில் இயேசுவும் தமது சீஷர்களிடம் மலைகளுக்கு ஓடிப் போகும்படி கூறினார். Craig S. Keener இந்த எச்சரிக்கையை நமக்குப் பயன்படுத்தி பின்வருமாறு கூறுகிறார்: "இந்த யுகத்தின் ஆபத்துக்களை நாம் உலக நடப்பாக ஏற்று இயன்ற வரை தப்பித்துக் கொள்ள வேண்டும் என்று தம் பின்பற்றாளர்களுக்கு எச்சரிக்கிறார்."[7]

சபை வரலாற்று ஆசிரியர் யூசிபியஸ்ஸின்படி கிறிஸ்தவர்கள் தப்பி ஓடி யோர்தானுக்கு அப்பால் இருந்த பெல்லாவில் தங்கினதாக காணப்பட்டது.[8] இப்படி ஓடின செயல் ரோமர்கள் எருசலேமை சூழ்ந்து கொள்வதற்கு சற்று முன்பு நிகழ்ந்தது என்று எபிபானேஸ் சொன்னான்.[9] இருப்பினும், சில நிபுணர்கள் பெல்லாவில் ஓடிப்போனதாகக் குறிப்பிடுவதைக் குறித்து தர்க்கம் செய்கின்றனர்.[10] எப்படியிருந்தாலும், இயேசு கூறின இந்த வார்த்தைகள் இந்த இடத்தில் அவரது இரண்டாம் வருகையைக் குறிப்பிடுவதில்லை, ஏனெனில் அந்த நேரத்தில் ஓடிப்போகுதல் சாத்தியமற்றது.

**வசனம் 17.** பாழாக்கும் அருவருப்பை பார்க்கும் சிலர் அல்லது எருசலேம் சூழப்பட்டதைக் காணும் சிலர் **வீட்டின் மேல்** இருக்கும் போது நிகழ்ந்தால், அவர்கள் **தன் வீட்டிலே இருக்கிற எதையாகிலும் எடுக்க இறங்காதிருக்க வேண்டும்** என்று இயேசு சொன்னார். பலஸ்தீனாவில் இருந்த வீடுகளின் கூரைகள் சமதளமாக இருந்தன. அவைகள் தானியங்கள் காயவைக்கவும் (யோசுவா 2:6), ஓய்வு எடுக்கவும் (1 சாமுவேல் 9:25), காவல் காக்கவும் (ஏசாயா 22:1) ஜெபிப்பதற்கான இடமாகவும் (நடபடிகள் 10:9) பயன்படுத்தப்பட்டன. கோடைகாலங்களில், மேல் வீடுகளில் குளிர்ச்சியான காற்று வீசுவதை அனுபவிக்கும்படி இரவு நேரங்களில் தங்குவதுண்டு. அவைகளுக்குச் செல்ல வீட்டின் வெளியில் படிக்கட்டுகளை கட்டியோ ஏணிகளை வைத்தோ பயன்படுத்தினார்கள். எனவே வீட்டின் மேல் இருக்கிறவன் தனக்கு வேண்டியதை எடுத்துக் கொள்ள வீட்டிற்குள் போகாமல் ஓடிவிடவேண்டும் என்று இயேசு சொன்னார். தேவையானவைகளை எடுத்துக்கட்டி

வைத்துக்கொள்ள போதிய அவகாசமிராது, மற்றும் கூடுதல் சுமை அவன் ஓடிப்போகத் தடையாக இருக்கும். வீட்டின் மேல் இருக்கிறவன், கீழே வீட்டிற்கு இறங்கி வராமல், அடுத்தடுத்த மேல் வீடுகளின் மேல் தாவிக்குதித்து விரைவாக தப்பியோடும்படி யோசனை கூறப்பட்டது.[11]

**வசனம் 18.** அதேபோல, **வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரங்களை எடுப்பதற்குத் திரும்பாதிருக்கக் கடவன்** என்றும் இயேசு சொன்னார். பழங்காலத்து மக்கள் பெரும்பாலும் பட்டணத்தைச் சுற்றிலும் மதில் சுவர் கட்டப்பட்ட இடத்திற்குள் வாழ்ந்தனர், ஆனால் அவர்கள் பகல் நேரங்களில் வயல்களில் வேலை செய்தனர். பகலின் உஷ்ணத்தில் வேலை செய்வதால் தங்கள் "வஸ்திரங்களையோ" (*himation*) "மேல் வஸ்திரங்களையோ" தங்கள் வீடுகளிலேயே வைத்து விட்டு வந்து வேலை செய்வார்கள். குளிர் நேரங்களில் வஸ்திரத்துடன் செல்லுவது அவசியம், மேலும் வெளியிலே ஒருவர் தூங்கும்போது அவை போர்வையைப் போல பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டது (உபாகமகம் 24:13; மத்தேயு 5:40). இந்த அறிவுரையும், வசனம் 17ல் உள்ள அறிவுரையும் அடிப்படைத் தேவைகளைக் காட்டிலும் ஜீவன் (உயிர்) இன்னும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.[12] ஒருவன் தனது உடமைகளைத் (மாறாக) திரும்பப் பெற்றுக் கொள்ளலாம், ஆனால் தன் ஜீவனைத் திரும்ப பெற்றுக் கொள்ள இயலாது.

**வசனம் 19.** இந்த வெளியேற்றம் விசேஷமாக **கர்ப்பவதிகளுக்கும் பால் கொடுக்கிறவர்களுக்கும்** விசேஷமாக கடினக் காரியம். மலைத்தேசங்களில் அப்படிப்பட்ட ஸ்திரீகள் வேகமாகப் பயணிக்க இயலாது, அவர்கள் மிக எளிதில் பாதிக்கப்படுவார்கள். ஆகையால், ரோம இராணுவம் மிக எளிதாக அவர்களைப் பிடித்து விடக் கூடும். கர்ப்பவதிகளின் கரு கலையக் கூடும், பால் கொடுப்பவர்கள் தங்கள் கண்முன் தங்கள் குழந்தைகள் கொல்லப்படுவதைக் காண நேரிடும்.

பட்டணத்துக்குள் இருக்கும் ஸ்திரீகளுக்கும் அது பதற்றத்தைக் கொடுக்கும் நேரமாக இருக்கக் கூடும். இயேசு தமது சிலுவையை சுமந்து கொண்டு போகும் வழியில், எருசலேமின் குமாரத்திகளைப் பார்த்து, " 'இதோ, மலடிகள் பாக்கியவதிகளென்றும், பிள்ளை பெறாத கற்பங்களும் பால் கொடாத முலைகளும் பாக்கியமானவைகள்' என்றும் சொல்லப்படும் நாட்கள் வரும்" என்று சொன்னார் (லூக்கா 23:29). எருசலேம் முற்றுகையிடப்பட்டு அதின் அழிவு பெறும் காலத்தை அவர் தமது மனதில் கொண்டு பேசினார் என்பதில் சந்தேகமில்லை, ஜோசிபஸ் எழுதுகையில், அந்நாட்களின் போது, "பஞ்சத்தால் மடிந்து போகும் நிலையிலிருந்த ஸ்திரீகளும் குழந்தைகளுமாய் மேல் வீடுகள் நிரம்பியிருந்தன" என்று எழுதினார்.[13] இரத்தத்தை உறைய வைக்கும் சம்பவமாக ஒரு ஸ்திரீ தனது சொந்த ஆண் சிசுவைக் கொன்று சாப்பிட்ட காட்சியையும் அறிவித்திருக்கிறார்.[14]

**வசனம் 20.** இயேசு தொடர்ந்து, **நீங்கள் ஓடிப்போவது மாரிக்காலத்திலாவது. ஓய்வுநாளிலாவது, சம்பவியாதபடிக்கு வேண்டிக் கொள்ளுங்கள்** என்றார். குளிர் காலமானால் அந்நேரத்தில் பயணம் பண்ணுவது மிகவும் கடினம். ஒரு ரபீயின் அறிக்கையில் சொல்லப்படுவதாவது, தம்மூஸ் (ஜூன்/ஜூலை) வெப்பமாகவும், டேபேத் (டிசம்பர்/ஜனவரி) குளிராகவும், நிஸான் (மார்ச்/ஏப்ரல்) அமைதியாகப் பயணம் பண்ணும் காலமுமாகும்.[15]

*குளிர் சீதோஷ்ணத்திற்கப்பால், பலஸ்தீனா பகுதியில் பனிப்பருவத்தில் திடீர் மழைகளும் வெள்ளப் பெருக்கும் ஏற்படும், வறண்ட காட்டாறுகள் (நீரோடைகள்) தண்ணீர் நிறைந்தபகுதியாக காட்சியளிக்கும், யோர்தான் நதி வெள்ளப்பெருக்கெடுத்து பிரளயமாகும் நிலையை அடையும். பாறைகளாலும் மண்சரிவுகளினாலும் சாலைகள் மூடப்படுவதால் அவைகளில் பயணிப்பது மிகக் கடினமாயிருந்தது; அவைகள் புயல் மழையால் அரிக்கப்பட்டிருக்கும்.*[16]

*யூதக் கிறிஸ்தவர்களுக்கு எழுதின மத்தேயு மட்டுமே, ஓய்வுநாட்களில் பயணம் பண்ணுவதன் கஷ்டத்தை சேர்த்து எழுதியிருக்கிறார். அப்பொழுது எருசலேமில் இருந்த அநேக கிறிஸ்தவர்கள் இன்னமும் நியாயப்பிரமாணத்தைக் கைக் கொண்டிருந்தபடியால் அந்நாளில் ஓடிப்போய் தப்புவதை விரும்பாமல் இருந்திருக்கலாம் (நடபடிகள் 15:1; 21:17, 20). பாரம்பரியத்தின்படி, யூதர்கள் 3/4 மைலுக்கு மேல் ஓய்வுநாளில் பயணம் பண்ணாதபடி தடை செய்யப்பட்டனர் (நடபடிகள் 1:12).*[17] *சிலர் குறிப்பிடும் போது நெகேமியா காலத்தில் வாசல்கள் ஓய்வுநாளில் அடைக்கப்பட்டது போலவே, அடைக்கப்பட்டிருக்கும் நேரத்தில் பட்டணத்தை விட்டு கிறிஸ்தவர்கள் வெளியேறுவது கடினமாக இருந்திருக்கும் (நெகேமியா 13:19-22), வியாபாரிகள் ஓய்வுநாளில் தங்கள் கடைகளை அடைத்து விடும்போது, விசுவாசிகள் தங்களுக்கு வேண்டிய அப்பத்தையோ பிற உணவு வகைகளையோ வாங்கிக் கொள்ள இயலாது. எல்லாவற்றிற்கும் மேலாக அவிசுவாசமுள்ள யூதர்கள் எருசலேமிலும் மற்ற இடங்களிலும் அவர்களை உபத்திரவப்படுத்தக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது.*

***வசனம் 21.*** *பிறகு இயேசு வரவிருந்த மிகப்* ***பெரிய உபத்திரவங்களைக்*** *குறித்து எச்சரித்தார். இது உலகத்தின் "முடிவு காலச்" சம்பவமாக ஏதோ எதிர்காலத்தில் நடப்பதுபோல் கூறப்படவில்லை. மாறாக, அது ரோமத்தளபதி, தீத்து ராயனின் முற்றுகை எருசலேமின் குடிகள்மேல் வரவிருந்ததையும் அதைத் தொடர்ந்து, பட்டணத்தின் மீது தொடுத்த திடீர் தாக்குதலையும் குறிக்கிறது.*

*பாழாக்கப்பட்ட நாசங்களைக் குறித்து கர்த்தர்* ***உலகம் உண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிருந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்*** *என்று சொன்னார். நோவா காலத்தில் உண்டான ஜலப்பிரளயத்தைக் காட்டிலும் அல்லது மோசேயின் காலத்தில் உண்டான பத்து வாதைகளைக் காட்டிலும் மோசமானதா? அதற்குப் பின்பு எதிர்காலத்தில் நடந்த நடக்க விருந்த யுத்தங்களில் உண்டாகும் உபத்திரவங்களைக் காட்டிலும் பெரிதா? இங்கு குறிப்பிடப்படும் பேச்சு நடையை அநேகமாக மிகைப்படுத்திப் பேசப்படுவதாக எடுத்துக் கொள்ளலாம் (காண்க எரேமியா 30:7; தானியேல் 12:1; யோவேல் 2:2). இந்த ஆலோசனை ஏதோ எருசலேமின் அழிவுத் தன்மையை மட்டுப்படுத்தும் நோக்கமல்ல, அது நியாயத்தீர்ப்பின் நாளை முன்னோட்டமாய் காட்டுவதாகும்.*

*இந்த நிகழ்ச்சிகளுக்கு கண்ணாரக் கண்ட சாட்சி, ஜோசிபஸ், மேற்குறித்தவைகளுக்கு ஒத்த வார்த்தைகளைப் பயன்படுத்தி பாழாக்குதலைக் குறித்து பேசினார்:*

> *அதே போல எனக்குத் தோன்றியபடி, அனைத்து மனுஷர்களுக்கும் உலகம் உண்டானது முதல் நடந்த துரதிர்ஷ்டமான காரியங்களை யூதர்களுக்கு நடந்தவைகளோடு ஒப்பிட்டால், அவைகளோடு பரிசீலித்துக் கூட பார்க்க இயலாது.*[18]

*வேறு எந்தப் பட்டணமும் இப்படியொரு துன்பத்தை ... உலகமுண்டானது முதல் அனுபவித்திராது.*[19]

*அதேபோல அவைகளில் ஏராளமானவர்கள் அழிந்த சம்பவம் உலகத்தின் மீது மனுஷர்களாலோ தேவனாலோ கொண்டுவரப்பட்ட எல்லா அழிவுகளையும் காட்டிலும் மித மிஞ்சின செயலாகும்.*[20]

எருசலேமின் முற்றுகை மற்றும் அழிவில் 11,00,000 பேர் கொல்லப்பட்டார்கள், 97,000 பேர் அடிமைத்தனத்தில் கொண்டு போகப் பட்டார்கள். இதில் பெரும்பாலான எண்ணிக்கையுடையோர் பிற இடங்களிலிருந்து எருசலேமுக்கு பக்திப் பயணிகளாக வந்திருந்த யூதர்கள் பஸ்கா பண்டிகையில் பங்கேற்றுக் கொண்டிருந்தவர்கள், மீதியானோர் எருசலேமில் வசித்தவர்கள்.[21]

**வசனம் 22. அந்த நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப் போவதில்லை;** தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும், என்று இயேசு சொன்னார். ரோமர்கள் எருசலேமை சூழ்ந்து கொண்டிருக்கையில், ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை மட்டுமே உபத்திரவம் நீடித்தது. அந்த முற்றுகை **தெரிந்து கொள்ளப்பட்டவர்களினிமித்தம் குறைக்கப்பட்டதாக இருந்தது.** "தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்" என்பது கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது (22:14ன் விளக்கவுரையைக் காண்க). லியோன் மோரீஸ் குறிப்பிட்டதாவது: "தேவனுடைய மக்கள் தங்களைச் சுற்றிலுமுள்ள மக்களுக்கு குறிப்பிட்ட இரக்கம் கொண்டுவருகின்றனர்; மனந்திரும்பாதவர்கள் கடைசி வரை இரட்சிப்பை பகிர்ந்து கொள்வதில்லை, இருந்தும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுடைய சமுதாயத்தின் மத்தியில் அவர்கள் இருப்பதால் சில நன்மைகள் அவர்களுக்கு வருகிறது."[22] ஆதிசபை வரலாற்று ஆசிரியர்கள் இந்த அழிவில் ஒரு கிறிஸ்தவன் கூட கொல்லப்படவில்லை. ஏனெனில் அவர்கள் இயேசுவின் கட்டளைகளைப் புரிந்து கொண்டு அதற்குக் கீழ்ப்படிந்திருந்தார்கள் என்று கூறுகின்றனர்.[23]

## *"கள்ளக் கிறிஸ்துக்களை நம்பாதேயுங்கள்" (24:23-28)*

***23**அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள்.*

***24**ஏனெனில், கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.*

***25**இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்.*

***26**ஆகையால்: அதோ வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல் வார்களானால், புறப்படாதிருங்கள்; இதோ, அறை வீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள்.*

***27**மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறது போல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்.*

***28**பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்.*

***வசனம் 23.*** *எருசலேம் அழிவு நேரத்தில் தாம் மறுபடியும் வருவதில்லை என்று கர்த்தர் தெளிவாக்கினார். அந்த நேரத்தில் மேசியாவின் வேடம் பூண்டவர்கள் யூதர்களுக்கு விடுதலை கொடுப்பதாகச் சொல்லி எழும்புவார்கள். இருப்பினும் இயேசுவைப் பின்பற்றுவோர் அவர்களைக் குறித்த வதந்திகளை பின்பற்றக் கூடாதவர்களாயிருந்தனர். ஜனங்கள்,* ***இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார்*** *என்று சொல்லுவார்கள். இந்த அறிக்கைகள் தப்பான நம்பிக்கையின் அடிப்படையில் வெளியிடப்படுபவை, உண்மையானவையல்ல,* ***அவனை நம்பாதேயுங்கள்*** *என்பது வசனம் 26ல் மறுபடியும், "அவர்களை நம்பாதேயுங்கள்," என்று சொல்லுகிறது.*

***வசனம் 24.*** *கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் நடப்பிப்பதால் உரிமை கொண்டாடுவார்கள். அவைகள் ஜனங்களை வஞ்சிக்கத்தக்தாக இருக்கும், பெரும்பாலும் சமாரியாவில் மாயவித்தை செய்து காட்டின சீமோன் மாதஸ்ஸைப் போன்றவர்கள் இவர்கள் (நடபடிகள் 8:9-11). இந்த அடையாளங்களும் அற்புதங்களும் ...* ***தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும்*** *... அதாவது கிறிஸ்தவர்களையும்* ***கூட தவறாக வழிநடத்தக் கூடியதாக,*** *இருக்கும்.*

***வசனம் 25.*** *இயேசு முக்கியத்துவமளித்து,* ***இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்*** *என்று சொன்னார். அவர் அடிக்கடி வரவிருந்த ஆபத்துக்களைக் குறித்து தமது சீஷர்களை அவர் எச்சரித்திருக்கிறார் (10:16-39; 16:21; 17:22, 23; 20:17-19; 26:1, 2). மிகவும் மோசமான இக்கட்டு நேரத்தில் கூட, அவர்கள் தம்மிடத்தில் விசுவாசமாயிருக்கும்படிக்கு அவர் அப்படிச் செய்தார்.*

***வசனம் 26.*** *கிறிஸ்து* ***வனாந்தரத்தில்*** *இருக்கிறார் என்று சொல்லப்படும் அறிக்கைளை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கும்படி சீஷர்களுக்கு இயேசு கற்பித்தார். ஜோசிப்பஸ் எழுதியுள்ளபடி, எருசலேமில் அநேக கள்ளத் தீர்க்கதரிசிகள் இருந்தார்கள் (பலஸ்தீனாவிலும் தான்), இது எருசலேம் அழிக்கப்படுவதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பு. அவர்கள் ஜனங்களை தங்களைப் பின்பற்றி வனாந்திரத்திற்கு கூடச் செல்ல சம்மதிக்க வைப்பார்கள், அங்கே அவர்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் நடப்பித்துக் காட்டி, அவைகள் தேவனிடத்திலிருந்து வந்ததாகக் காட்டுவார்கள்.*[24]

*ஜனங்கள் பொதுவாக மேசியா வனாந்தரத்தில் வருவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர் (காண்க நடபடிகள் 21:38). பிரசித்தமான இந்த நம்பிக்கை யோவான் ஸ்நானனிடத்தில் திரளானவர்கள் போனார்கள் என்பதையும் யூதமதத் தலைவர்கள் ஏன் அவனை கிறிஸ்துவா என்று கேட்டார்கள் என்பதையும் விளக்கப்படுத்துகிறது (3:1, 5; 11:7; யோவான் 1:19-28).* Richard A. Horsley *மற்றும்* John S. Hanson *எழுதியதாவது,*

> *தேவனுடைய செயலின் முக்கியத்துவத்தை திரளான ஜனங்கள், ஏற்றுக் கொள்ளத் தக்க வகையில் ஏவப்பட்டார்கள், தங்களின் வேலைகளையும், வீடுகளையும், கிராமங்களையும் விட்டு தேவ அருள் பெற்றவர்களாக கருதப்பட்ட தலைவர்களைப் பின்பற்றிப் போனார்கள். புனித பாரம்பரியத்திலிருந்து தேவன் வனாந்தரத்தில்தான் மீட்பிற்கான*

அடையாளங்களையும் அற்புதங்களையும் நடப்பிப்பார் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள், மற்றும் வனாந்தரம்தான் சுத்திகரிப்பிற்கான இடம், அதற்கான ஆயத்தங்களும், புதுப்பித்தலும் கூட அங்கேதான் இடம் பெறுவதாயிருந்தது.[25]

ரபீமார்களின் இலக்கியத்தில், மேசியா இரண்டாவது மோசே என்று சித்தரிக்கப்பட்டார். அவர் ஒன்றேல் வனாந்தரத்தில் தோன்றுவார் அல்லது யோர்தானுக்கு அப்புறத்தில் தோன்றுவார் என்றும் கூறப்பட்டது.[26]

இயேசு தம்மைப் பின்பற்றுவோரிடம், **புறப்படாதிருங்கள்** என்று சொன்னார். "கள்ளமேசியாக்களைப் பின்பற்றி வனாந்தரத்திற்குப் போய் விடாதிருங்கள்" என்று சொன்னார். இதற்கு ஒத்த மற்றொரு வசனப் பகுதியில், "நீங்களோ போகாமலும் பின் தொடராமலும் இருங்கள்" என்று இயேசு சொன்னார் (லூக்கா 17:23).

வனாந்தரத்தைக் குறிப்பிடுவதோடு, இயேசு **அறைவீட்டிற்குள்** இருப்பதாக இந்த வேடதாரிகள் கூறுவார்கள். அறைவீடு என்பது பொது ஜனங்களிடமிருந்து தன்னை மறைத்துக் கொள்ள ஏதுவாக, ஒரு பாதுகாப்புள்ள தனியறை. இந்த வார்த்தையின் அதே கிரேக்கப்பதம் *tameion* இதற்கு முன்பு மத்தேயுவில் காணப்படுகிறது, அந்தரங்கமாக பிதாவிடம் ஜெபத்திற்கான இடமாகக் கூறப்படுகிறது (மத்தேயு 6:6 க்கான விளக்கவுரையைக் காண்க).

**வசனம் 27.** கள்ளத்தீர்க்கதரிசிகளின் வஞ்சிக்கத்தக்கதான பெரிய அடையாளங்களுக்கு மாறாக, இயேசு தமது இரண்டாம் வருகையைக் குறித்து உண்மையும் தெளிவானதுமான விளக்கத்தைக் கொடுத்தார்: **மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறது போல, மனுஷ குமாரனுடைய வருகையும் இருக்கும்.** அவரது "வருகை" (*parousia*) இருளான பகுதியிலோ அல்லது இரகசியமான இடத்திலோ நிகழாது, ஆனால் எல்லாரும் காணத்தக்கதாக இருக்கும். வானத்தில் தோன்றி, மின்னல் பிரகாசிப்பது போல, அது திடீரென்றும் வியப்பூட்டும் வெளிச்சமாகவும் இருக்கும் (லூக்கா 17:24). யோவான் எழுதினார்: "இதோ மேகங்களுடனே வருகிறார், கண்கள் யாவும் அவரைக் காணும்" (வெளிப்படுத்தின விசேஷம் 1:7). மத்தேயு 24:30ல் இயேசு முன்னுரைத்த வார்த்தைகளுக்கு ஒப்பானது இந்த வாக்கியம்.

**வசனம் 28.** அநேகமாக, ஒரு பழைய பழமொழியான **பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்** என்பதை இயேசு அவருடைய வருகையைக் குறித்து தவறாக எடுத்துக் கொள்ள முடியாத வகையில் சுட்டிக் காட்டியிருக்கலாம் (லூக்கா 17:37ஐக் காண்க). இதற்கு ஒத்த வாக்கியம் யோபு 39:30ல் கழுகைக் குறித்து/பிணந்தின்னிக்கழுகைக் குறித்துப் பேசினார்: "பிணம் எங்கேயோ அங்கே கழுகு சேரும்." எபிரெய வார்த்தை *nesher* கிரேக்க வார்த்தை *aetos* ஆகிய இரண்டுமே "கழுகையோ" அல்லது பிணந்தின்னிக் கழுகையோ குறிக்கும்.

"பிணம்" என்பதற்கு கிரேக்க வார்த்தை (*ptōma*) வன்முறையால் கொல்லப்பட்டவனைக்குறிக்கும் (14:12ன் விளக்கவுரையைக் காண்க). Keener குறிப்பிடுகையில் மரித்த பிரேதங்களின் பயங்கர விதிகளை "பண்டைய வசனப்பகுதிகள் அடிக்கடி பேசுகிறது" என்று குறிப்பிட்டார், "பெரும்பாலும் யுத்தத்தில் விழுந்த அவைகள் பறவைகளாலும் நாய்களாலும்

*உண்ணப்பட்டன.”*[27] Donald A. Hagner *வசனம் 28ன் அர்த்தத்தை பொழிப்புரையாக இப்படிச் சொல்லுகிறார்: “இப்படியாக, நீங்கள் முழுநிச்சயமாய் அறிந்திருக்கிறபடி பிணந்தின்னி கழுகுகள் கூடுகிற இடத்தை நீங்கள் காணும்போது அங்கே பிரேதங்கள் இருக்கும், அப்படியே மனுஷ குமாரனுடைய வருகையை நீங்கள் காணத் தவற மாட்டீர்கள்.”*[28]

*வசனம் 28ஐ கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஒப்பிடுவதை விடுத்து, சில நிபுணர்கள் அதை ஞானார்த்தமாகக் கூறுவதாக விளக்கமளிக்கின்றனர். “பிணம்” என்பது அழிந்து போகும் இஸ்ரவேலின் பிரசவ வேதனை போன்ற கடைசி நேரத்தைக் குறிப்பாகக் கூறுகின்றனர். அங்கே, கழுகுகள் கூடும் என்பது பொருத்தமற்றதாகக் காணுகிறது. அவைகள் வன்துன்பத்துக்கு பலியாக்கிய கள்ளத்தீர்க்கதரிசிகளையும் கள்ள கிறிஸ்துக்களையும் குறிப்பிடலாம், அதாவது எருசலேமின் கடைசி நேரத்தில் இருந்த ஜனங்களைக் குறிப்பிடுகிறது என்கின்றனர் இதில் பயன்படுத்தப்படும் மற்றொரு தெரிவு, மாறாகபயன்படுத்தப்படும் மொழியாக்கம். “கழுகுகள்” என்பது ரோமசேனையின் அடையாளம் கழுகாய் இருந்தது, அவர்களின் படைகள் இதன் கீழே அணிவகுத்துச் சென்றன. கடைசி சாத்தியக்கூறு இந்த முன்னுரைப்பாளர்கள் எருசலேமின் குழப்பத்தில் அது அழிவுற்றபின் அங்கே கூடின சுற்று வட்டாரமக்களைக் குறிப்பதாக கூறுகின்றனர். இந்த வியாக்கியானங்களெல்லாம் சாத்தியமற்றவையாக இருந்தபோதிலும், அவை அப்படி நடந்திருக்க இயலாது என்றே தோன்றுகிறது.*

## *“மனுஷகுமாரனுடைய அடையாளம் காணப்படும்” (24:29-31)*

***29அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்.***

***30அப்பொழுது மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்.***

***31வலுவாய்த் தொனிக்கும் எக்காளச் சத்தத்தோடே அவர் தமது தூதர்களைஅனுப்புவார்; அவர்கள்அவரால்தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனை மட்டும் நாலுதிசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்.***

*24:29-31ஐ எருசலேமின் வீழ்ச்சியை விளக்கப்படுத்துகிற ஒரு (இரகசியத்தின்) வெளிப்பாடு என்று நாம் விளக்கமளிக்கலாமா? இந்த கண்ணோட்டத்தையுடையவர்கள் வீழ்ச்சியின் போது உண்டாகும் அழிவு மற்றும் மிகப் பெரிய உபத்திரவங்களை குறிப்பிடுகிற உருவக இயல் புடைய ஒரு வசனப்பகுதி என்கின்றனர். பாபிலோனின் வீழ்ச்சியைக் குறித்த விளக்கம் (ஏசாயா 13:10, 19), ஏதோமின் வீழ்ச்சி (ஏசாயா 34:4), எகிப்தின் உபத்திரவம் (எசேக்கியேல் 32:7, 8) ஆகியன அதற்கு ஒப்பான*

*வெளிப்பாட்டைக் கொண்டுள்ளன. இந்தக் கோணத்தைக் கொண்டுள்ளவர்கள் இந்த வசனப்பகுதியை கிறிஸ்துவின் இரண்டாம் வருகையோடு ஒப்பிடத்தேவையில்லை என்கின்றனர். கூடுதலாக, இந்த வசனப்பகுதி எருசலேமின் வீழ்ச்சிக்கு குறிப்பிடப்படுமானால், அதின் சிந்தனைக்கருத்து வசனம் 34ஐக் கைக்கொள்ள அதிக அவசியம், அது எருசலேமின் வீழ்ச்சிக்கும் கிறிஸ்துவின் வருகைக்கும் இடையிலே ஒரு இயல்பான பிரிவைக் காட்டும் வாக்கியம்.*

*இருப்பினும், 24:29-31ன் கருத்து கிறிஸ்துவின் வருகையையே அதிகமாக வியாக்கியானப்படுத்துகிற தொடர்பை கொண்டுள்ளது. இதற்கு முந்திய வசனங்கள் (24:27, 28), கிறிஸ்துவின் வருகையை காணத்தவறுவோர் எவருமிலர் என்கிற அளவுக்கு ஒரு நிகழ்வாக இருக்கும்; எல்லாராலும் அது காணப்படும். மேலும், "தூதர்கள்," "வலுவாய்த் தொனிக்கும் எக்காளம்," "தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்" என்பவைகளெல்லாம் கிறிஸ்துவின் வருகைக்கு ஆதாரமாக பிற வசனங்களில் விளக்கப்படுத்தப்படுவது போலவே கொடுக்கப்பட்டவைகள். மேசியாவின் வருகையை குறித்து அவர்கள் கேள்விப்படும் முரணான கள்ளப் போதனைகளுக்குப் எதிராக, தமது சீஷர்கள் சத்தியத்தை அறியும்படி இயேசு விரும்பினார்.*

***வசனம் 29.*** *துணை வினைச்சொல்லான* ***முடிந்தவுடனே*** *என்பது (eutheōs) கடினமான ஒரு வார்த்தை. இந்த வசனத்தில் கூறப்படும் நிகழ்வுகளெல்லாம் (**சூரியன்** அந்தகாரப்படும், **சந்திரன்** ஒளியைக் கொடாதிருக்கும், **நட்சத்திரங்கள்** வானத்திலிருந்து விழும் போன்றவைகளெல்லாம்) எருசலேம் பட்டணம் அனுபவித்த* ***உபத்திரவங்களுக்குப் பிறகு*** *உண்மையில் உடனே நிகழ்ந்தவைகளல்ல. எல்லாவற்றுக்கும் மேலாக, கிறிஸ்து அந்த நேரத்தில் திரும்ப வரவில்லை, மற்றும் இன்னும் அவர் மறுபடியும் திரும்ப வரவில்லை - இன்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும் வரவில்லை.*

*அநேக கருத்துக்கள் இங்கே பரிசீலிக்கப்படவேண்டும்: (1) "உடனே" என்பதை வசனம் 36ல் சொல்லப்படும் வெளிச்சத்தில் விளக்கப்படுத்துவது அவசியம், இதில் இயேசு சொல்லும்போது, அவருடைய வருகையை "பிதா ஒருவரைத்தவிர மற்றொருவனும் அறியான்" என்று சொல்லுகிறார். இந்த வாக்கியத்தின் மூலம் (தமது வருகையின்) நிகழ்ச்சிக்கு ஒரு உறுதியான குறிப்பாக ஒரு நேரத்தைக் குறிப்பிடவில்லை என்பதை வசனம் 29ல் காட்டுகிறது. (2) இந்த வசனம் ஒரு உருவகமாகப் பேசுகிற (இரகசியத்தின்) வெளிப்பாடு, அது நேரடிப் பொருளில் எடுத்துக் கொள்ளக் கூடாது. நடபடிகள் 2:15-21 இத்துடன் சம்பந்தப்பட்ட வசனம். இந்த வசனப்பகுதியில், பேதுரு யோவேல் தீர்க்கதரிசனத்தின் இரண்டாம் அதி காரத்தைக் குறிப்பிட்டு - அதில் அதற்கு ஒப்பான உருவக வெளிப்படுத்துதல் குறிப்பிட்டபடி - பெந்தெகோஸ்தே நாளில் நிறைவேறியது. சூரியன் அந்தகாரமாகவோ, சந்திரன் இரத்தமாகவோ உண்மையாக மாறா விட்டாலும், அதில் கூறப்பட்டவை உண்மையே. (3) "உடனே" என்பது "தீர்க்கதரிசன முன்னோட்டச் சுருக்கம்" என்று சொல்லப்படுகிற ஒரு அமைப்புச் சொல். சில வேளைகளில் தீர்க்கதரிசிகள் இரண்டு நிகழ்ச்சிகளை ஒன்றாக குறுகிய காலத்தில் நிகழ்வது போல விவரிப்பார்கள் ஆனால் உண்மையில் அவை இரு வேறுபட்ட காலங்களில் அதிக இடைவெளியில் நிறைவேறும். தேவாலயத்தின்*

அழிவும் உலகத்தின் முடிவும் இந்த அதிகாரத்தில் ஒன்றாகப் பேசப்படுகிறது என்பது அவை இரண்டிற்குமிடையே ஒரு நெருங்கிய இறையியல் தொடர்பு இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறது. அவை இரண்டுமே இயேசுவின் ஊழியத்தின் நிறைவேற்றம். இரண்டுமே அவர்தான் தேவன் என்றும் தமது ஜனங்களுக்குக் கொடுத்த உண்மையும் இறுதியுமான செய்தி என்பதை உறுதிப்படுத்துகிறது.[29]

**வசனம் 30.** "உமது வருகைக்கு *அடையாளம்* என்ன?" என்று இயேசுவின் சீஷர்கள் கேட்டார்கள் (24:3; வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது). இந்த இடத்தில் இயேசு அவர்களின் கேள்விக்குப் பதிலளிக்கிறார்: **மனுஷகுமாரனுடைய அடையாளம் என்பது** அவருடைய இரண்டாம் வருகையாக இருக்கும். தேவன் தெரிவு செய்யும் வேளையில், திடீரென்றும் எதிர்பாராமலும் இயேசு வருவார். கள்ள மேசியாக்கள் வனாந்தரத்திலும் அறை வீட்டிலும் தோன்றுவது போன்ற இரகசியமானதாக இராமல், அவருடைய வருகையின் தோற்றம் ஒவ்வொருவரும் காணக் கூடியதாகவும் கேட்கக் கூடியதாகவும் இருக்கும் (மாற்கு 13:26; லூக்கா 21:27; 1 தெசலோனிக்கேயர் 4:16; வெளிப்படுத்தின விசேஷம் 1:7). அவருடைய வருகையின் போது ஆயத்தமாகாத பூமியின் குடிகள் **புலம்புவார்கள். பூமியின் கோத்திரத்தார் யாவரும்** என்பது நிச்சயமாக கர்த்தருடைய வருகைக்காக விழித்திருந்து ஜெபித்துக்கொண்டிருக்கிற கூட்டத்திற்கு உட்பட்டவர்களாயிருக்க மாட்டார்கள் (காண்க 1 கொரிந்தியர் 16:22; 2 தீமோத்தேயு 4:8). அவருடைய வருகை **வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும்** இருக்கும். **மனுஷகுமாரன் வானத்தின் மேகங்கள் மேல் வருவார்** என்பது தானியேல் 7:13, 14 லிருந்து பெறப்பட்டது, இவ்வசனப்பகுதி கிறிஸ்துவின் அதிகாரத்தையும் ஆளுகையையும் வலியுறுத்துகிறது.

**வசனம் 31. வலுவாய்த் தொனிக்கும் எக்காளச்சத்தம்** என்பது வரவிருக்கும் நியாயத்தீர்ப்பைக் குறித்து கொடுக்கப்படும் எச்சரிக்கை; என்று விளக்கப்படுத்தப்படுகிறது; எப்படியிருப்பினும், அந்த வேளையில், ஜனங்கள் மனந்திரும்புவது மிகவும் தாமதமான செயல். மாறாக, எக்காளச்சத்தம் நீதிமான்களைக் கூட்டிச் சேர்ப்பதாயிருக்கும் (காண்க ஏசாயா 27:13); "எக்காளச் சத்தம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்" என்று பவுல் சொன்னார் (1 கொரிந்தியர் 15:52); "ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்" (1 தெசலோனிக்கேயர் 4:16).

"எக்காளம்" என்ற கிரேக்க வார்த்தை (*salpinx*) எபிரேய வார்த்தைகளான *shopar* மற்றும் *ch$^a$tsots$^e$rah* மொழியாக்கம் செய்யப்பட்ட செப்துவஜிந்த் பதமாகும். *Shopar* என்பது பொதுவாக செம்மறி ஆட்டின் கொம்பை பெரும்பாலும் குறிக்கும், *ch$^a$tsots$^e$rah* என்பதோ நீண்ட, நேராக உள்ள உலோக குழாயின் முடிவில் அகன்ற ஒரு கருவி.[30] இங்கு இவற்றில் ஏதாவது ஒரு கருவியைக் குறிக்கிறது.

**அவருடைய தூதர்கள் ... அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை ... கூட்டிச் சேர்ப்பார்கள்** என்று இயேசு சொன்னார். தமது தூதர்களைக் கொண்டு தேவனுக்கு விசுவாசமாயிருப்பவர்களை பூமியின் நான்கு திசைகளிலிருந்து கூட்டிச் சேர்ப்பதன் அதிகாரத்தில் அவருடைய தெய்வீகம் காணப்படுகிறது,

களைகளைப் பற்றிய உவமையிலும் சகலவித மீன்களையும் வாரிக்கொள்ளும் வலையைப் பற்றிய உவமையிலும் கூட உலகத்தின் முடிவில் நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்துக் காட்டும் பொருட்டு தமது தூதர்களை முகவர்களாக பயன்படுத்தும் செயலை இயேசு குறிப்பிட்டார் (மத்தேயு 13:41, 42, 49, 50).

உலகத்தின் நான்கு திசைகளிலிருந்தும் கூட்டிச் சேர்க்கப்படும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் தாங்கள்தான் என்று யூதர்கள் நம்பிக்கொண்டிருந்தார்கள் (உபாகமம் 30:4; ஏசாயா 11:12; 43:5; 49:5; 56:8).[31] இந்த எதிர்பார்ப்பு யூதர்களின் (பதினெட்டு ஆசி உரைகள் கொண்ட) ஜெபங்களில் ஒன்றான ஸெமோனெ எஸ்றேயில் பிரதிபலிக்கிறது. பத்தாவது ஜெபத்தில், "வலுவான ஷோபரை ஊதுங்கள், ஏனெனில் நமது அடிமைத்தனத்திலிருந்து கூட்டிச் சேர்த்து பூமியின் நாலு திசைகளிலிருந்தும் ஒன்று சேர்த்து நமது கொடியை உயர்த்துவார். கர்த்தாவே, நீர், ஆசீர்வதிக்கப்பட்டவர், நீர் சிதறிப்போன உம்முடைய மக்களாகிய இஸ்ரவேலை கூட்டிச் சேர்ப்பீராக" என்று சொல்லப்படுகிறது. "தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்" எனும் பதம் வசனம் 31ல் கூறுகிறபடி பழைய ஏற்பாட்டின் கீழ் விசுவாசமுள்ளவர்களாய் வாழ்ந்த இஸ்ரவேலரையும் குறித்துப் பேசினபோதிலும், நிச்சயமாக இது புதிய உடன்படிக்கையின் கீழிருக்கிற கிறிஸ்தவர்களைக் குறித்துப் பேசுகிறது. இந்த வார்த்தை இயேசுவைப் பின்பற்றுவோரை சுட்டிக் காட்ட மேலும் இரண்டு வசனங்களில் இதே அதிகாரத்தில் பயன்படுத்தப்படுகிறது (24:22, 24).

தேவதூதர்கள் பூமியின் **நான்கு திசைகளிலுமிருந்து** தெரிந்து கொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச் சேர்ப்பார்கள். முழு பூமியையும் குறிப்பதற்காக பயன்படுத்தப்படும் பழங்கால முறை இது, உலகின் நான்கு திசைகளிலிருந்து என்று பொருள் (காண்க எரேமியா 49:36; எசேக்கியேல் 37:9; தானியேல் 7:2; 8:8; சகரியா 2:6; வெளிப்படுத்தின விசேஷம் 7:1). **வானத்தின் ஒருமுனை தொடங்கி மறுமுனை வரைக்கும்** என்று பொருள்.

## "இந்த சந்ததியாரின் நாட்களுக்குள் எருசலேம் அழிவுறும்" (24:32-35)

***32அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர் விடும்போது, வசந்த காலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள்.***

***33அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும் போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்.***

***34இவைகளெல்லாம் சம்பவிக்கு முன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.***

***35வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை.***

***வசனம் 32.*** இந்த வேளையில், இயேசு மீண்டும், எருசலேம் அழிவைக்குறித்த தலைப்புக்கு திரும்புகிறார். **அத்திமரத்தைக்** குறித்து அவர் உதாரணப்படுத்துவது தெளிவு. இயற்கையின் குறிப்பிட்ட சில அடையாளங்களைக் கொண்டு காலங்களின் மாற்றங்களை ஜனங்கள் தீர்மானிப்பதை அவர் குறிப்பிட்டு பேசிக் கொண்டிருக்கிறார். வசந்த காலத்தில், அத்திமரத்தில் **துளிர்தோன்றும், அவை இளங்கிளைகளாக** மாறும். அவை **இலை விடும்போது கோடை காலம் நெருங்குவதை** அடையாளப்படுத்தியது *(21:19ன் விளக்கத்தைக் காண்க).* இயற்கையின் மாற்றங்களைக் கொண்டு காலங்களை நிதானிக்கும் நபர்கள் ஆவிக்குரிய அடையாளங்களைக் கொண்டு எருசலேமின் மீது வரும் அழிவையும் நிதானிக்கக் கூடும் என்று கிறிஸ்து சொல்லிக் கொண்டிருந்தார்.

***வசனம் 33.*** இயேசு தமது சீஷர்களிடம், **அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்** என்று சொன்னார். "அவர் சமீபித்திருக்கிறார்" எனும் சொற்றொடர் NASB திருமறையில் இந்த வசனம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை குறிப்பிடுவது போல் தோன்றுகிறது. இதை இன்னும் அதிக விளக்கமாக NLT, "அவருடைய வருகை சமீபித்திருக்கிறது" என்று சொல்லுகிறது. மூல வசனப் பகுதியும் "சமீபித்திருக்கிறது" என்றே மொழிபெயர்க்கப்படக் கூடும் (KJV; NIV) அல்லது "காலம் சமீபித்திருக்கிறது" (JNT). இந்த மொழிபெயர்ப்பு அதன் முன்னும் பின்னும் வருகிற வசனங்களின் பின்னணிகளைக் கொண்டு பார்த்தால் சிறந்த ஆதாரத்தைக் கொடுப்பதாய் தோன்றுகிறது. "அதிலே" என்று குறிப்பிடுவதில் கோடைகாலத்தை சுட்டிக் காட்டுகிறது *(24:32)*, எருசலேமின் வீழ்ச்சி அப்பொழுது தான் இடம் பெற்றது.[32] ஜோசிபஸ்ஸின் வரலாற்றுப்படி, Ab எனும் மாதம் பத்தாம் தேதி (ஜூலை/ஆகஸ்ட்) கி.பி. *70*ல் தேவாலயம் அழிவு பெற்றது.[33]

***வசனம் 34.*** இயேசு மேலும் சொன்னார், **இவைகளெல்லாம் சம்பவிக்கு முன்னே, இந்த சந்ததி ஒழிந்து போகாது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.** இந்த வசனத்தை எப்படி விளக்கப்படுத்துவது? இதன் விளக்கம் "சந்ததி" மற்றும் "இவைகளெல்லாம்" என்கிற பதங்களின் பொருளில் சார்ந்திருக்கிறது. நாம் சந்ததி (*genea*) எனும் இப்பதத்தை "இந்த ஜனங்கள்" என்று விளக்கமளிக்கலாமா, அதாவது, யூத இனத்தவரை? இந்த கண்ணோட்டத்தையுடையவர்கள் அவருடைய மறுவருகைக்குமுன் யூத ஜனங்கள் மரிப்பதில்லை என்று இயேசு வாக்குத்தத்தம் செய்தார் என்கின்றனர். இருப்பினும், Jack P. Lewis பின்வருமாறு குறிப்பிட்டார்,

> *Genos* எனும் வார்த்தைக் (இனத்துக்)கும் *genea* எனும் (சந்ததி) வார்த்தைக்கும் வித்தியாசம் இருக்கிறது ... மத்தேயுவில் பிற இடங்களில் *genea* என்பது ஒரு காலத்தில் (ஒரு காலகட்டத்தில்) வாழும் ஜனங்களை குறிப்பாக இயேசுவின் நாட்களில் வாழும் ஜனங்களைக் குறிக்கிறது *(1:17; 11:16; 12:39, 41, 45; 23:36;* மாற்கு *8:38;* லூக்கா *11:50*f; *17:25)*, அதே பொருளில் தான் சந்தேகத்துக்கு இடமின்றி இங்கேயும் பொருள்படுகிறது. ஒரு சந்ததி ஒழிந்து போவதற்கு முன் தேவாலயம் விழுந்து போகும்.[34]

"இவைகளெல்லாம்" என்று வசனம் *34*ல் சொல்லப்படுவது இயல்பாகவே

*(நீண்ட வசனப்பகுதியோடு பயன்படுத்தப்பட்டிராவிடில்) வசனம் 33ல் சொல்லப்படுகிற "இவைகளையெல்லாம்" என்பதுடன் குறிப்பிடப்படுகிறது. இதன் பொருள் இந்த வசனப்பகுதியில் இதற்கு முன்பு விளக்கப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள் நிறைவு பெறுவதை குறிப்பிடுகிறது. "இவைகளெல்லாம்" எனும் சொற்றொடர் இந்த அதிகாரத்தின் ஆரம்பத்திற்கு வழிநடத்துகிறது, அதிலே கர்த்தருடைய உரையாடல் அவரது முன்னுரைத்தலுடன் தொடங்கி தேவாலயத்தின் அழிவையும் சீஷர்கள் கேட்ட கேள்வியில் "இவைகளெல்லாம்" எப்பொழுது சம்பவிக்கும் என்பதற்கும் பதிலளிக்கிறார் (24:2, 3). வசனம் 36ல் இயேசு எப்பொழுது வருவார் என்று "பிதா ஒருவரைத் தவிர மற்றொருவனும் அறியான்" என்று சொல்லியிருப்பதால், "இவைகளெல்லாம்" என்பது அவரது இரண்டாம் வருகையை உட்படுத்தி பேசுவதில்லை.*

***வசனம் 35.*** *இயேசு ஏற்கனவே தமது இரண்டாம் வருகையையும் உலகத்தின் முடிவையும் முன்னுரைத்திருந்தார் (24:29-31), இங்கே அவர்* ***வானமும் பூமியும் ஒழிந்து போகும்*** *என்ற உண்மையை மறு உறுதிப்படுத்துகிறார். இந்த போதனையை மேலும் வலியுறுத்துகிற பிற வசனம் (2 பேதுரு 3:7, 10-12). பூமியும் அதின் கிரியைகளும் அநித்தியமானது, கர்த்தருடைய வார்த்தையோ நித்தியமானது (1 பேதுரு 1:24, 25).* ***எனது வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை*** *என்று இயேசு சொன்னபோது, தமது முன்னுரைத்தல் நம்பத்தகுந்தவை என்பதை கோடிட்டு அவர் காட்டுகிறார்.*

---

*குறிப்புகள்*

[1]1 Maccabees 1:47, 54, 59; 2 Maccabees 6:1–11; Josephus *Antiquities* 12.5.4. [2]Josephus *Wars* 4.3.7, 10; 4.5.4; 5.1.3. [3]Ibid., 4.3.10. [4]Ibid., 6.4.7. [5]Ibid., 6.6.1. *ரோம அளவீடு ஒரு கழுகாலும் ஒரு பன்றியாலும் கிரீடம் சூட்டப்படுவதைக் காண்க* Michael J. Wilkins, "Matthew," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary*, vol. 1, *Matthew, Mark, Luke*, ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 148. [6]1 Maccabees 2:28. [7]Craig S. Keener, *A Commentary on the Gospel of Matthew* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1999), 573. [8]Eusebius *Ecclesiastical History* 3.5.3. [9]Epiphanius *Against Heresies* 29.7.7. [10]*காண்க* William Hendriksen, *New Testament Commentary: Exposition of the Gospel According to Matthew* (Grand Rapids, Mich.: Baker Book House, 1973), 858.

[11]*காண்க* Josephus *Antiquities* 13.5.3. [12]*மெக்காபியரின் புரட்சியின் போது, மத்ததியாசும் அவருடைய குமாரர்களும் "நகரத்தில் அவர்களுக்கு இருந்த எல்லாவற்றையும் விட்டு மலைகளுக்கு ஓடிப்போனார்கள்"* (1 Maccabees 2:28; NRSV). [13]Josephus *Wars* 5.12.3. [14]Ibid., 6.3.4. [15]*Numbers Rabbah* 3.6. [16]*காண்க* Mishnah *Taanith* 1.3. [17]Mishnah *Erubin* 4.3; 5.7. [18]Josephus *Wars* Preface 4. [19]Ibid., 5.10.5. [20]Ibid., 6.9.4.

[21]Ibid., 6.9.3. [22]Leon Morris, *The Gospel according to Matthew,* Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 606. [23]Eusebius *Ecclesiastical History* 3.5.3; Epiphanius *Against Heresies* 29.7.7. [24]Josephus *Antiquities* 20.5.1; 20.8.6, 10; *Wars* 2.8.1; 2.13.4, 5; 4.9.3–5. [25]Richard A. Horsley and John S. Hanson, *Bandits, Prophets, and Messiahs: Popular Movements in the Time of Jesus*, New Voices in Biblical Studies, 2 (New York: Winston Press, 1985), 162. [26]*Numbers Rabbah* 11.2; *Song Rabbah* 2.9. [27]Keener, 583. *காண்க* Homer

*Iliad* 11.395, 454; 22.42, 43, 335-36, 353; 24.411; *Odyssey* 3.258–60. [28]Donald A. Hagner, *Matthew 14—28*, Word Biblical Commentary, vol. 33B (Dallas: Word Books, 1995), 707. [29]R. T. France, *The Gospel According to Matthew,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 334. [30]Francis Brown, S. R. Driver, and Charles A. Briggs, *A Hebrew and English Lexicon of the Old Testament* (Oxford: Clarendon Press, 1968), 348.

[31]*Psalms of Solomon* 8.28; 11.2-5; 17.26; *4 Ezra* 13.39-50; *Testament of Asher* 7.7. [32]Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 2, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 129. [33]Josephus *Wars* 6.4.5. *எரேமியா 52:12ன் படி, இதே தேதியில் சாலொமோனின் ஆலயமும் அழிவுண்டது - "ஐந்தாம் மாதம் பத்தாம் நாள்." மிஸ்ஹானா இரண்டு ஆலயங்களும் அப் வருஷம் ஒன்பதாம் தேதி அழிவுற்றதாக கூறுகிறார்.* (Mishnah *Taanith* 4.6.) [34]Lewis, 129–30.